**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி திட்டத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, திட்டத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். திட்டத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த

வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு நோக்கெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது திட்டத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க திட்டம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம், சுழற்சி நிறுவனங்களை இனங்காண்பது மற்றும் ஆயுட்கால மதிப்பீடு செய்வது என்பன காலரீதியில் நடைபெற வேண்டுமாயினும், 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு விவசாயிகளது இறப்புப் பணிக்கொடை நிதியத்திற்கென ரூபா 19,016,134 நிதி ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | தற்சமயம் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் புதிய பங்களிப்பாளர்களை ஆட்சேர்க்காது செயற்படுவதால் ஆயுட்கால மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதில்லை. எதிர்காலத்தில் ஓய்வூதியத் திட்டம் மீள் வியூகத்திற்கு உள்ளாகும் போது ஆயுட்கால மதிப்பீட்டை குறித்தவாறு மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். | ஆயுட்கால மதிப்பீடு காலரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹியங்களை, எம்பிலிப்பிட்டிய, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள உத்தியோகபூர்வ மனைகளில் திட்டத்திற்குரிய 76.6 பேர்ச்சர்ஸ் காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிலிடப்படவில்லை. அவ்வாறே, 1986 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து சுவீகரிக்கப்பட்ட எம்பிலிப்பிட்டிய உத்தியோகபூர்வ மனைக்குரிய கட்டிடத்தின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடப்படவில்லை. | மஹியங்களை, எம்பிலிப்பிட்டிய, அனுராதபுரம் என்பவற்றில் உள்ள உத்தியோகபூர்வ மனைகளது காணிகளது பெறுமதியும் எம்பிலிப்பிட்டிய உத்தியோகபூர்வ மனையினது பெறுமதியும் மதிப்பீடு செய்யப்படுவது தொடர்பாக தற்போது உள்ளவாறு மாவட்டப் பிரதி/ உதவிப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளைத் துரிதமாக முடிவு செய்து மதிப்பீட்டுப் பெறுமதியைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டியன**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் கடனும் முற்பணமும் ஆகிய ரூபா 692,302 கூட்டுத் தொகை 5-25 ஆண்டுகளாக நிலவி வருவனவாகும். இதனை ஊழியர் பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து காலத்துக்குக் காலம் அறவிடாது கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | சபையின் வேலையிலிருந்து விலகிய / ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களது கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்ட கடன் மீதிகளும் வட்டியும் அறவிடுவதற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய, கொடுப்பனவு செய்யப்படாதவிடத்து எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட அநேக உத்தியோகத்தர்களது கடன் மீதியானது அவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தைப் பெறுவதற்கான ஆவணங்களைப் பெறும் | கடனை குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொருட்டு சபைக்கு வருகை தருகையில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய உத்தியோகத்தர்களின் கடன் மீதியானது பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 708,347 கூட்டுத்தொகையான 5-15 ஆண்டு காலப்பகுதிக்குரிய மீள் நிரப்பப் படவேண்டிய சம்பளம், சம்பள முற்பணம், நானாவித கடன்பட்டோர் மீதி என்பவற்றைத் தீர்வு செய்யாது அவை கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்ட வாறிருந்தன. | சபைக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பெற வேண்டிய ரூபா 708,347 மீதியே இது ஆகும். குறித்த தரப்பினரிடமிருந்து இதனை அறவிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன. | குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 சிறு போகத்தின்போது அறிக்கையிடப்படக்கூடிய மொத்த இழப்பீட்டுத் தொகை ரூபா 1,284 மில்லியன் ஆகும். இதில் ரூபா 10,000 ஆரம்பக் கொடுப்பனவின் பொருட்டு ரூபா 613 மில்லியன் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து கிடைத்திருந்தது. 2019 சிறுபோகம் தொடர்பாக காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட மீள் காப்புறுதி உடன்படிக்கைப் பிரகாரம் சபையின் பொறுப்பாக உள்ள ரூபா 359 மில்லியன் நீங்கியதன் பின்னர் தொடர்ந்தும் பெறப்பட வேண்டிய ரூபா 312 மில்லியனைப் பெறுவதற்கான நடவடிக்கை இதுவரை நடைபெறவில்லை. | 2019 சிறுபோகத்தின் பொருட்டு மீள் காப்புறுதியின் கீழ் பெறவேண்டிய இழப்பீட்டினைப் பெற்றுத் தருமாறு எழுத்து மூலமும் வாய்மொழி மூலம் அவர்களுக்கு அநேக சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பொதுத் திறைசேரி மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த நிலுவையைத் துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 702,186,913 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 978,995,887 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 276,808,974 குறைவு அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என்பவற்றின் பொருட்டு இழப்பீடு வழங்குவதற்கு பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த தவணைப் பணம் 2018 உடன் ஒப்பிடுகையில் ரூபா 460,120,000 குறைவாக இருந்தமையும் மீள் காப்புறுதித் தவணைக் கொடுப்பனவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 328,582,848 அதிகரிப்புக்குள்ளாகியமையும் இக்குறைவிற்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கமத்தொழில் அமைச்சின் செயலாளரால் 2019 செப்டம்பர் 02 ஆந் திகதி வெளியிடப்பட்ட 07/2017 (திருத்தம் 11) ஆம் இலக்க புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 2019/20 பெரும்போகம் தொடக்கம் பயிர் இழப்பிற்கான நட்ட ஈட்டை வழங்கும் சந்தர்ப்பங்களில் அவசர விபத்துக் காப்புறுதிக்கென தவணைப் பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தங்களும் ஏற்பாடுகளும் உள்ளடங்கிய முறையான நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டுமாயினும், இதுவரை அவ்வாறு நடைபெறவில்லை. | கமத்தொழில் அமைச்சரின் செயலாளரால் 2019.09.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் 2019/20 பெரும்போகம் தொடக்கம் இழப்பீட்டுக்கு உரிய விவசாயிகளிடமிருந்து காப்புறுதித் தவணைப் பணத்தை அறவிடும் அடிப்படையில் அவசரகால காப்புறுதி உரித்துறுதியை வழங்குவதற்கு இருந்த போதும், இழப்பீட்டைக் கணிப்பிடும் சந்தர்ப்பத்திலும் அதனை வழங்கும் சந்தர்ப்பத்திலும் நாட்டில் நிலவிய கொரோனா நோய் தொடர்பாகக் கவனம் செலுத்தி அவ்வாறான சந்தர்ப்பத்தில் இழப்பீட்டிலிருந்து தவணைப் பணத்தை அறவிடுவது பொருத்தமற்றது என முகாமைத்துவம் தீர்மானித்தது. ஆகவே, அது பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டது.<br>அதற்கமைய, 2019/20 பெரும்போகத்தின்போது அதனை அமுலாக்காது சுற்றறிக்கைப் பிரகாரம் | சுற்றறிக்கைப் பிரகாரம் முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| | செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, 2020 சிறுபோகத்தின்போது உரித்துறுதி வழங்கப்படும். | |
| (ஆ) கணனித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீவடங்கிலுமான விவசாயிகளது தகவல்கள் அடங்கிய தரவு முறைமையைத் தயாரிக்க வேண்டுமென கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டபோதும், மீளாய்வாண்டு இறுதியிலும் அது தயாரிக்கப்படவில்லை. அத்தரவை களஞ்சியப்படுத்துவதற்கு மென் அணி முறைமையையும் கொள்வனவு செய்திருக்கவில்லை. | தற்சமயம் அதற்குரிய மென் அணி சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் (IFC) உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மென் அணி முறைமையும் தரவுக் களஞ்சியமும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டனவாகும். தரவுக் களஞ்சியத்தில் தற்போது வெளிக்கள மட்டத்தில் தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன. | தயாரிக்கப்பட்ட மென் அணியைப் பயன்படுத்தி தரவு முறைமையை துரிதமாக அமைக்க வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 யூன் 04 ஆந் திகதி இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு சபையானது அலுவலகக் கட்டிட நிர்மாண வேலைத் திட்டத்திற்கு ரூபா 565,800 கொடுப்பனவு செய்திருந்தது. இதனை மீளநிரப்ப முடியாது என அந்நிறுவனம் தெரிவித்திருந்ததுடன் செயற்திட்டம் கைவிடப்பட்டதன் காரணமாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை சிக்கனமற்ற செலவாகியது. எனினும், அது மூலதன முற்பணமாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளில் சபையின் தலைமை அலுவலக அமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த காணியை ஒதுக்கீடு செய்ததன் பின்னர் இலங்கை காணி மீட்பு, அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆரம்ப அடித்தள வேலைகளைச் செய்யவுள்ளது. பணி நிறைவடையும் வரை மூலதன முற்பணமாக காட்டப்பட்டுள்ளது. | தலைமை அலுவலகத்தின் கட்டிடத்தைத் துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கட்டாயப் பயிர்ச்செய்கைக்கான 6 வகைப் பயிர்களின் பொருட்டு அமுலாகும் கட்டணம் அறவிடப்படாத காப்புறுதியின்போது இழப்பீடு அதிகரிக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்புடன் சபையானது மலேசிய கம்பனி ஒன்றுடன் 2018 ஏப்ரல் 01 தொடக்கம் 2019 மார்ச் 31 வரை மீள் காப்புறுதி உடன்படிக்கையைச் செய்தது. கடந்த சில ஆண்டுகளது மத்திய வங்கி இழப்பு அறிக்கையின் பிரகாரம் அதி கூடிய காப்புறுதிப் பொறுப்பின் பெறுமதி ஏறக்குறைய ரூபா 5,000,000,000 ஆகவிருந்தது. அதற்கான மீள் காப்புறுதி ரூபா 3,500,000,000 ஆகும். மத்திய வங்கி அறிக்கையின் தரவுகளை பிழையின்றிப் பயன்படுத்தாது காப்புறுதிப் பொறுப்பின் பெறுமதி ரூபா 7,500,000,000 எனத் தீர்மானிக்கப்பட்டு சபையானது ரூபா 5,315,000,000 மீள் காப்புறுதி பொறுப்பில் ஈடுபட்டதால் மீள் காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்த வேண்டியேற்பட்ட தொகை ரூபா 675,000,000 ஆகும். மீள் காப்புறுதி உடன்படிக்கைப் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட இழப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 2,185,000,000 வரை இழப்பீட்டைக் கொடுப்பனவு செய்ததன் பின்னர் கமத்தொழில் காப்புறுதிச் சபை மீள் காப்புறுதிக்கு உரித்துடையதாக | அப்போதிருந்த காலநிலைக்கு ஏற்ப பெரும் அபாயம் நிலவியமையாலும் இந் நிலைமையைப் போன்று முன்னர் இருந்த போகங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரும் அபாயம் நிலவியமையால் மீள் காப்புறுதி பெறப்பட்டது. காப்புறுதி நடைமுறைகளுக்கு அமைய முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட பொறுப்பு இந்த மீள் காப்புறுதிக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. எதிர்பார்த்தவாறு இழப்பு ஏற்பட்டிருப்பின் மீள் காப்புறுதியின் மூலம் அதனை ஈடுசெய்திருக்கலாம். இந்த மீள் காப்புறுதியைப் பெறும்போது அமைச்சரவை அங்கீகரித்த கேள்விச் சபையன் மூலமும் இத்துறையில் உள்ள தேர்ச்சி பெற்றோரால் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவாலும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. காப்புறுதி விதிமுறைகளின் படி நடவடிக்கை எடுத்துள்ளமையால் இத்தவணைப் பணத்தை பயனற்றது எனக் கூற இயலாது. சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காலநிலை மற்றும் ஏனைய இழப்புகள் சம்பந்தமாக சிறந்ததும் தவறு அற்றதுமான முன்னோடித் திட்டத்தை தயாரிகரும் ஆற்றல் இல்லாமையாலும் எதிர்பார்த்த இழப்பீட்டு அறிக்கை | பாதிப்பைச் சரிவர மதிப்பீடு செய்து நிறுவனம் நலன்பெறும் விதத்தில் மீள் காப்புறுதியாளருடன் உடன்படிக்கை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமையும். எனினும், 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும்போகம் என்பவற்றின் பொருட்டு அறிக்கையிடப்பட்ட மொத்த இழப்பீடு ரூபா 1,016,824,823 மாத்திரமேயாகியமையால் சபையால் மீள்காப்புறுதி மூலம் இழப்பீடு எதனையும் பெற முடியவில்லை. கடந்த இழப்புகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் மொத்த காப்புறுதி இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்டால் வெளிநாட்டு மீள் காப்புறுதிக் கம்பனிக்கு வழங்கிய ரூபா 473,032,000 ஐக் குறைத்திருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. | இல்லாமையாலும் மீள் காப்புறுதியின் மூலம் எதிர்பார்த்த நலன் கிடைக்கவில்லை. | |
| (ஆ) | கைத்தொழில் அமைச்சினால் அமுல்படுத்தப்படும் இலங்கைக்கான டிஜிட்டல் பொருளாதார உபாய வழிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்பறுதிச் சபையினூடாக ஒருமுகப்படுத்தப்பட்ட கமத்தொழில் தகவல் முறைமையைக் கட்டியெழுப்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களை முன்னோடியாகக் கொண்டு விவசாயிகளின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையைக் கட்டியெழுப்புதல், இலங்கைக்கான விவசாய நிலங்களை இனங்காணுதல் மற்றும் அவற்றைக் கணனி மயப்படுத்தும் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. கம்பஹா மாவட்டத்திற்கென கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட தரவுப் பாதத்தைப் | இச்செயற்திட்டம் நிறுத்தப்படவில்லை. கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் சாத்தியக்கூறு ஆய்வுகளின் (Feasibility Study) மூலம் பெறப்பட்ட அனுபவத்திற்கமைய இந்நிகழ்ச்சித் திட்டத்தை தீவடங்கிலும் நடாத்துவதற்கு எண்ணமுள்ளது. அதற்குத் தேவையான முன்மொழிதல் ஏற்கனவே அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்ட செலவு பயனற்றுப் போகாமலும் எதிர்காலச் செலவினம் ஆக்கபூர்வமாக அமைவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதற்கு எதிர்பார்த்தபோதும், சபையால் செயற்திட்டம் மேற்கொள்ளப்படும் போது அத்தரவு முறைமை நேரடியாகப் பயன்படுத்தப்பட முடியாதுள்ளமை தொடர்பாக இனங்காணப்பட்ட நலிவுகள் கமத்தொழில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களது எதிர்ப்பு மற்றும் ஏற்பட்ட நிதி நெருக்கடி என்பவை காரணமாக கம்பஹா மற்றும் பதுளை மாவட்டங்களில் முறையே 26 கமநல சேவை நிலையங்களின் 80,006 காணித்துண்டுகளிலும் 10 கமநல நிலையங்களது 27,139 காணித் துண்டுகளிலும் 10,825 மற்றும் 9,955 காணித் துண்டுகளுக்கு மாத்திரமே வரைபடங்களைச் செய்து முடிக்க கூடியதாக இருந்தது. 07 மாதங்கள் மாத்திரமே செயற்பட்டு பின்னர் இடைநடுவே நிறுத்தப்பட்ட இச்செயற்திட்டத்தை எதிர்காலத்திலும் அமுலாக்காது போனால் இதன் பொருட்டு இதுவரை செலவாகிய ரூபா 9,610,720 பயனற்ற செலவாகிவிடும் என அவதானிக்கப்பட்டது. | | |
| (இ | கட்டணமில்லாத காப்புறுதியின் கீழ் காப்புறுதிக்குரிய விவசாயிகளுக்கு பயிர் இழப்பு இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கெனப் பொதுத்திறைசேரி கட்டுநிதியைக் கொடுப்பனவு செய்வது தாமதமாகியமையால் 2017/18 பெரும்போகம் மற்றும் 2018 சிறுபோகம் என்பவற்றின் போதிலான இழப்பீட்டை வழங்குவதில் ஓராண்டு தாமதம் ஏற்பட்டு | துரிதமாக இழப்பீட்டை வழங்குவதற்குப் பொதுத் திறைசேரியிடம் பணம் கோரப்பட்டதுடன், பணம் பெறப்பட்டதும் இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2020 யூலை மாதமளவில் 2019/20 பெரும்போகத்தையும் உள்ளடக்கியவாறு, அப்போகத்தின்போது நிராகரிக்கப்பட்ட விவசாயிகளது இழப்பீட்டைத் தவிர, | காலத்துக்குக் காலம் பயிர் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டு சிறுபோகத்தின்போதே அது வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 2018/19 பெரும்போகத்தின் பொருட்டு பயிர் இழப்பிற்குள்ளான 20,100 விவசாயிகளுக்குரிய ரூபா 598,972,934 இழப்பீடுத் தொகையானது 2020 பெப்ரவரியில், அதாவது 2019/2020 பெரும்போகத்தின்போதே வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய, கட்டணமில்லாத காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தில் ஏதோவொரு வினைத்திறமையின்மை அவதானிக்கப்பட்டது. சரியான தருணத்தில் இழப்பீட்டைப் பெறாததால் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறதிச் சபையின் மீதான நம்பிக்கையை விவசாயிகள் இழந்துள்ளமை பொலநறுவை, அநுராதபுரம், குருநாகலை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின்போது மேலும் புலனாகியது. | அதற்கு முன்னைய போகத்துக்கான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையானது உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதி நிறுவனத்துடன் இணைந்து 2016 மே 05 தொடக்கம் 2019 மே வரையான காலப்பகுதியின்போது 6 மாவட்டங்களது சுட்டிகளின் அடிப்படையில் அமைந்த காப்புறுதி விதிமுறையைத் தயாரித்து அதனை அமுல்படுத்துவதற்கான உடன்படிக்கையைச் செய்திருந்தபோதும், 2018/2019 பெரும் போகத்தின்போது வவுனியா, அனுராதபுரம், கிளிநொச்சி, முல்லைத்தீவு | தற்சமயம் கம்பஹா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சுட்டுகளின் அடிப்படையில் அமைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் இழப்பீட்டைக் கணிப்பது ஆரம்பமாகி உள்ளது. அவ்வாறே, சுட்டுக்களின் அடிப்படையில் அமைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்குவதற்கு இதுவரை திட்டமிடப்படவில்லை. தற்சமயம் விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்படுகின்றது. | தீவின் சகல இழப்புக்கான மதிப்பீடுகளிலும் நவீன விதிமுறைகளைப் பயன்படுத்துவதற்கும் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகிய மாவட்டங்களில் ஆராய்ச்சி மட்டத்தில் அதனை அமுல்படுத்தியிருந்தது. இழப்பை மதிப்பீடு செய்வதற்கான நவீன விதிமுறையை அறிமுகம் செய்வதற்கு சுட்டுகளின் அடிப்படையில் அமைந்த காப்புறுதி விதிமுறையை அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டபோதும், வவுனியா மாவட்டத்திற்கு மாத்திரமே இந்த இழப்பீட்டு விதிமுறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | விலங்கினக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட கால்நடைகளது காப்புறுதிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் அந்த உடன்படிக்கைகளைப் புதுப்பிப்பதற்கு மாவட்ட அலுவலகங்கள் கவனம் செலுத்தாததால் விலங்கினக் காப்புறுதி குறைவடைந்திருந்தது என்பது கேகாலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகப் பரிசோதனையின்போது புலனாகியது. கேகாலை மாவட்ட அலுவலகப் பரிசோதனையின்போது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளது 224 கால்நடைக் காப்புறுதிகளில் 64 காப்புறுதிகள் 2019 ஆம் ஆண்டில் காலாவதியாகியபோதும், அக்காப்புறுதிகளை மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விலங்கினக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட கால்நடைகளது காப்புறுதிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் அவற்றைப் புதுப்பிக்காத காரணம் தற்சமயம் இனங்காணப்பட்டுள்ளது. இக்கால்நடைகள் வங்கிக் கடன் மூலம் பெறப்பட்டவையாதலால் வங்கிக்குச் சமர்ப்பிப்பதற்காக மாத்திரமே காப்புறுதி பெறப்பட்டமை இதற்கான பிரதான காரணமாகும்.<br><br>இதற்குப் புறம்பாக பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், நிறுவனங்கள் என்பன மூலமும் விவசாயிகளுக்குக் கால்நடைகள் வழங்கும் போது பாதுகாப்பிற்கான காப்புறுதி ஆரம்பத்தில் பெறப்படுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பின்னர் காப்புறுதி சம்பந்தமாக விவசாயிகள் கவனிப்பதில்லை.<br><br>எவ்வாறாயினும், இந்நிலைமை இனங்காணப்பட்ட தையடுத்து இக்காப்புறுதிக் காலம் முடிவடைவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் | விலங்கினக் காப்புறுதி விதிமுறையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அவர்களை இனங்கண்டு இவ்விலங்கினக் காப்புறுதியின் பெறுமதியை விளக்கி அவர்களை எதிர்வரும் ஆண்டுகளிலும் அதில் ஈடுபடுத்துவதற்கு விதிமுறைகளை அமுல்படுத்துமாறு மாவட்ட அலுவலகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.<br><br>அதற்குப் புறம்பாக, இவ்விலங்கினங்களை வழங்கிய நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வங்கி என்பவற்றுடனும் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதும் இதற்கான தீர்வாக அமையுமாதலால் அவ்வாறு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பன**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) எம்பிலிப்பிட்டியவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ மனையில் தேவையான பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாது 21 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப் படாதிருந்தது. | குறித்த சொத்தைப் புனரமைத்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்படாத சொத்துக்களை சீர்திருத்திப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கண்டி, அம்பாறை, மன்னம்பிட்டி, மஹவ ஆகிய மாவட்டங்களில் கமத்தொழில் காப்புறுதி சபைக்குச் சொந்தமான மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு பிரதேச செயலகத்தின் மூலம் காணி சுவீகரிக்கப்பட்டிருந்த போதும், இக்காணிகளில் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்காது அந்நாள் | இந்தக் காணிகளின் உரித்தை முறைப்படி சுவீகரித்து மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு நிதியைப் பெற்று அவற்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாவட்ட அலுவலகங்களைத் துரிதமாக நிர்மாணித்து, வாடகைக் கட்டிடங்களை விட்டு அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலாக 2-12 ஆண்டுகளாக வாடகைக்குப் பெறப்பட்டிருந்த கட்டிடங்களில் அலுவலகங்கள் நடாத்தப் பட்டவாறிருந்தன. | | |
| (இ) | நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனக் குழாமில் இருந்த 07 வாகனங்களுக்கு 03 சாரதிகள் மாத்திரமே இருந்ததால் அந்த வாகனங்கள் குறைவாகப் பயன்படுத்தப் பட்டவாறிருந்தன. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்ட போதும், 2020 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரம் இருக்கவில்லை. எவ்வாறாயினும், மீண்டும் அப்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான சேவையின் அவசியத்தை முகாமைத்துச் சேவைகள் திணைக்களத்திற்கு விளக்கி அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பதவிகளில் ஆட்சேர்ப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | போதியளவு சாரதிகளை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எதிர்கால மனிதவளத் தேவைகளைக் கருத்தில் கொண்டு 2015 யூலை 30 ஆந் திகதிய 463/14 ஆம் இலக்க பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தஞ் செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை (SOR) நடைமுறைக்குச் சாத்தியமானவாறு திருத்தப்பட்டு முகாமைத்துவச் | அந்த அங்கீகாரத்தைப் பெற்று 05 ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளது. சபையின் நடவடிக்கைகள் விரிவடைவதால் பதவியணியினரது தேவை மிகவும் அதிகரித்துள்ளது. ஆகவே, சகல தேவைகளையும் கருத்தில் கொண்டு புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப் பட்டவாறுள்ளது. ஆகஸ்ட் மாதமளவில் | ஆட்சேர்ப்பு நடைமுறையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் திணைக்களத்தில் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதனைப் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர், புதிய திருத்தத்தை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இருந்த 421 பதவியணியினரில் 19 நிறைவேற்றுத்தர பதவிகளும் 98 நிறைவேற்று தரமில்லாத பதவிகளும் 22 கனிஷ்ட தரப் பதவிகளுமாக மொத்தம் 139 வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த உத்தியோகத்தர் பற்றாக்குறையால் தலைமை அலுவலகம், வெளிக்களக் கடமைகள், மாவட்ட அலுவலகங்கள் என்பவற்றில் வினைத்திறனுடனும் தாமதம் இன்றியும் வேலைகள் நடைபெறுவதற்கு இடையூறு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக, சபையானது ஒப்பந்த அடிப்படையில் 13 உத்தியோகத்தர் களையும் நாளாந்த படிக் கொடுப்பனவு அடிப்படையில் 48 பயிற்சி உத்தியோகத்தர் களையும் பணியிலமர்த்தி நிரந்தரப் பதவியணியினருக்குரிய கடமைகளை நிறைவேற்றியிருந்தது. | பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இச்சகல வெற்றிடங்களும் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். நிறைவேற்று தரப் பதவியில் விரைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு புதினப் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவினது தலைவரது அங்கீகாரம் பெப்பட்டுள்ளது. வெற்றிடம் தொடர்பாக புதினப் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |